புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **05 செப்டம்பர், 2021**

## பத்திரிகை செய்தி...

இந்திய விடுதலைப் போராட்ட வீரர் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ. சிதம்பரனாரின் 150-வது பிறந்த நாள் விழா தூத்துக்குடியில் இன்று(05-09-2021) சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

வ.உ.சி 150-வது பிறந்த நாள் விழாக் குழு சார்பில் அபிராமி மஹாலில் நடைபெற்ற விழாவில் துணைநிலை ஆளுநர் டாக்டர். சௌந்தரராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை ஆற்றினார்.

விழாவில், விழாக் குழுத் தலைவர் திரு சண்முகசுந்தரம், செயலாளர் திரு செந்தில் ஆறுகமம், வ.உ.சி கல்விக் குழுமத்தின் செயலர் திரு சொக்கலிங்கம், மெர்கன்டைல் வங்கியின் மேனாள் இயக்குநர் திரு. தமிழரசு, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழு உறுப்பினர் திரு ரமேஷ், வர்த்தகர்கள் சங்கத் தலைவர் விநாயக மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.